2022 ஜனவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(திருத்தங்கள் வலியுறுத்தப் பெறவில்லை.)

மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 5 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்களால் 6–1–2022 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

8. அறிவிப்புகள்

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2021-2022, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2021–2022 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

Message

"In pursuance of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, R.N. Ravi, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving, in the Tamil Nadu Legislative Assembly, the Demands for Further Grants for the year 2021–2022."